**Previous Examination date – 25.06.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 129 of 2021**

**Deposition of Witness P.W.6**

| | |
|---|---|
| **Name : சுருளியப்பன்** | **Father/Husband's Name : அழகர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.09.2025.**

**A1 produced on PT Warrant. A2 died. A3 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தேனி மாவட்டத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2019ம் வருடம் பழனி காவலர் குடியிருப்பில் குடியிருந்தபோது 06.07.2019ம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு நான் என் வீட்டிற்கு வந்தபோது என் பக்கத்து வீட்டில் பெண் காவலர் விஜயசாந்தி என்பவர் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார். பெண் காவலர் விஜயசாந்திக்கும், அவரது கணவர் செல்லபாண்டிக்கும் பிரச்சனை இருந்து வந்துள்ளது. பலமுறை செல்லபாண்டி, விஜயசாந்தியை வீட்டில் வைத்து மிரட்டினார். சம்பவதன்று 06.07.2019ம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தபோது செல்லபாண்டி குடிபோதையில் விஜயசாந்தியை பார்த்து நீ போலிஸா இருந்தா பெரிய இவளா டீ என்று சொல்லி தலை முடியை பிடித்து இழுத்து சுவற்றில் முட்ட வைத்து, கழுத்தை நெறித்து அடித்தார். பின்பு விஜயசாந்தி மற்றும் அவரது குழந்தைகளை காலால் எத்தி செல்லபாண்டி தள்ளிவிட்டார். அப்போது நானும், சத்தம் கேட்டு வந்திருந்த ராஜலட்சுமி, முகமது ஹனிபா ஆகியோர்கள் சத்தம் போட்டு விலக்கிவிடவும், செல்லபாண்டி விஜயசாந்தியை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றுள்ளார். மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**2.** 1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும்

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.09.18 17:51:59 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.